ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்

# குறள் முழக்கம்



## சாத்தா தமிழ் அறக்கட்டளை

**செந்தில்துரைசாமி**

திருமதி. விசாலாட்சிவேலு - திரு. வேலுஇராமன் “**திரைகடலோடியும் திரவியம் தேடு**” என்பது அவ்வையின் முதுமொழி. “**திரைகடலோடியும் திருக்குறள் படி, பரப்பு**” என்பது புதுமொழி. இதற்கு எடுத்துக்காட்டாகச் செயல்புரிந்து வருவது அமெரிக்காவின் டெக்சாசு மாநிலம், டாலசில் உள்ள ***சாத்தா தமிழ் அறக்கட்டளை*** என்கிற தன்னார்வத் தொண்டு அமைப்பு.





ஆம், திருக்குறளை அனைத்துத் தமிழர்களுக்கும், முதன்மையாக அடுத்த தலைமுறைக் குழந்தைகளுக்கும் கொண்டுசெல்ல வேண்டும், அனைவரும் திருக்குறளைப் படித்து வாழ்வில் பயனுறவேண்டும் என்ற உயரிய நோக்கில் திருக்குறள் சார்ந்த பல்வேறு முன்னெடுப்புகளை, பல தன்னார்வலர்களை ஒருங்கிணைத்து, கடந்த14 ஆண்டுகளாக இந்நிறுவனம் செய்துவருகிறது.

பெருமையுடையவர்ஆற்றுவார்ஆற்றின்
அருமைஉடையசெயல். (குறள் 975)

என்ற குறளுக்கு ஏற்ப, பல அரிய செயல்களை அவற்றுக்கு உரிய முறையான வழியில் செய்துமுடிக்கும் திறமையுடையவர்கள் சாத்தா தமிழ் அறக்கட்டளை அமைப்பினர். தமிழ்மொழியையும் நம் பண்பாட்டையும் இளந்தலைமுறையினரிடம் பரவும் வகைசெய்தல் மற்றும் அறப்பணிகளைச் செய்தல், சாத்தா தமிழ் அறக்கட்டளையின் நோக்கமாகும்.

இதன் நிறுவனர்கள் திரு. வேலுஇராமன் மற்றும் அவரது துணைவியார் திருமதி. விசாலாட்சிவேலு அவர்கள் 1998இல் அமெரிக்காவிற்குவந்தார்கள். அவர்களின் பெற்றோர்கள் தொண்டுமனம் கொண்டவர்கள். தமிழ்நாட்டில், பிறருக்குப் பணவுதவி

செய்வது மட்டுமின்றி, உடலாலும் உதவி செய்யவேண்டும், அப்போதுதான் மகிழ்ச்சி எப்போதும் நிலைக்கும் என்ற கருத்தோடு, தொண்டறம் செய்துவந்தவர்கள். இச்சூழலில் தமிழ்நாட்டில் வளர்ந்ததால், அமெரிக்கா வந்தபிறகும் தொடர்ந்து சேவை செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு தமிழ்ப் பணிகளையும், அறப்பணிகளையும் அமெரிக்காவிலும் இந்தியாவிலும் செய்துவருகிறார்கள்.

அதன் ஒரு பகுதியாக, முதலில் குழந்தைகள் வீட்டில், மற்றும் உறவினர்களுடன் தமிழிலேயே பேசவேண்டும் என்ற நோக்கில் தம்மகன் உள்ளிட்ட ஏழு குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக்கொடுக்க 2001இல் பிளேனோ தமிழ்ப்பள்ளியைத் தொடங்கினர்.

தமிழ்ப்பாடத்தின் ஒருபகுதியாகத் திருக்குறளைக் குழந்தைகளுக்குக் கற்பித்தாலும் அவர்களை மேலும் ஊக்கப்படுத்தவேண்டும் என்பதற்காக சாச்தா தமிழ்அறக்கட்டளை, அமெரிக்காவில் முதன்முறையாக "**ஒருகுறள் ஒருவெள்ளி**" என்ற திட்டத்தை அறிவித்து, குழந்தைகள் ஒரு திருக்குறளைப் பொருளுடன் கூறினால் ஒரு அமெரிக்க வெள்ளி என்ற திருக்குறள் ஓதும் போட்டிகளைக் கடந்த 14 ஆண்டுகளாக நடத்திவருகிறது. இப் போட்டிகளில் இதுவரை 70,000 அமெரிக்கவெள்ளிகள் பரிசாக அளிக்கப்பட்டுள்ளன.

முதலில் பள்ளி அளவில் தொடங்கப்பட்ட இப் போட்டிகள், பின்னர் டாலசு மாநகரம், டெக்சசு மாநிலம் என்று விரிவடைந்து, இவ்வாண்டு முதன்முறையாக நாடு தழுவிய அளவில், இணைய மெய்நிகர்வழியில் நடத்தப்பட்டன. இவ்வாண்டின் பங்கேற்பாளர்கள் சுமார் 14,500 முறை திருக்குறளை ஓதி புதிய சாதனை படைத்துள்ளனர். இவற்றில் அமெரிக்கா மற்றும் கனடாவிலிருந்து 310 பேர்பங்கேற்றனர். நடுவர்கள் 100 பேர்.

திருக்குறள் போட்டியில் மாணவர்கள் மட்டுமின்றிப் பெரியவர்களும் கலந்துகொள்ளலாம். இதுவரை டாலசுநகரைச் சேர்ந்த திருமதி.கீதா அருணாச்சலம், முனைவர் சித்ரா மகேசு, செல்வி சீதாராமசாமி, திரு. செந்தில்செல்வன் துரைசாமி ஆகிய நால்வர் 1,330 குறள்களையும் சொல்லி, குறளரசி, குறள்இளவரசி, குறளரசன் பட்டங்களைப் பெற்றுள்ளார்கள்.

இதுவரை குறள் ஓதும் போட்டிகளில் இரண்டு வயதேயான குழந்தைமுதல் 73 வயது பெரியவர்கள் வரை கலந்துகொண்டிருக்கின்றனர்.

திருக்குறள் மட்டுமல்லாமல் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி ஓதுதல், மற்றும் பல்வேறு தமிழ்த்திறன் போட்டிகளான பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி, திருக்குறள் கருத்தரங்கம், பொருட்காட்சி, சிறப்புப் பேச்சாளர்கள் என்று ஒவ்வொரு ஆண்டும் இப்பணி மேலும் வெவ்வேறு பரிமாணங்களில் விரிவடைந்து வருகிறது.

வடஅமெரிக்காவில் உள்ள அனைத்துத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பான வடஅமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் குறள்தேனீ நிகழ்ச்சிகளையும், கடந்த 2015 ஆண்டு முதல் சாச்தா தமிழ் அறக்கட்டளை முன்னெடுத்து நடத்திவருகிறது. அதன் தொடர்ச்சியாக, இந்த 2021ஆம் ஆண்டின் குறள்தேனீயில் தேசியஅளவில் வடஅமெரிக்கா, மொத்தம் 8 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் உள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகள் 40,000 முறை திருக்குறளை ஓதியிருக்கிறார்கள். இவற்றிற்கு வடஅமெரிக்கா மட்டுமல்லாமல் கனடா, அயர்லாந்து, பின்லாந்து, ஐக்கியஅரபு அமீரகம், ஓமான், சிங்கப்பூர், இந்தியா எனப் பல்வேறு நாடுகளில் இருந்தும் நடுவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

2021ஆம் ஆண்டின் குறள்தேனீ போட்டியின் வழிமுறைகளை சாஸ்தா தமிழ் அறக்கட்டளையின் மூத்த தன்னார்வலர்களான திருமதி. இராதிகா நாராயணன் மற்றும் திருமதி. கவிதாவெங்கடேசன் இருவரும் மற்ற மண்டல ஒருங்கிணைப்பாளர்களுடன் கலந்தாலோசித்து, அவர்களுக்குப் பயிற்றுவித்து சிறப்பாக வழிநடத்தினர்.

இத் திருக்குறள் தேனீ போட்டிகளில் கலந்து கொள்வதற்குக் குழந்தைகளை ஆயத்தப்படுத்த, தமிழகத்தில் இருந்து திருக்குறள் கவனகர் திரு. தமிழ் மகிழ்நன் ஐயா அவர்களைக் கொண்டு ஒரு இலவசப் பயிற்சிப் பட்டறையும் ஐந்து அமர்வுகளாக நடத்தப்பட்டது.

சாச்தா தமிழ் அறக்கட்டளை, திருக்குறள் பரிசளிப்பு விழாக்கள் மற்றும் பேரவையின் குறள்தேனீ நிகழ்வுகளில், திருக்குறள் சார்ந்து

பணியாற்றும் பல ஆன்றோர்கள், சாதனையாளர்கள் ஆகியவர்களைச் சிறப்பு விருந்தினர்களாக அழைத்து அவர்களைப் பாராட்டி யுள்ளார்கள்.

அவர்களில் குறிப்பிடத்தக்க சிலர்:

முனைவர் அழகப்பா இராம்மோகன்,
இயக்குநர், உலகத்தமிழ்வளர்ச்சிஅறக்கட்டளை.

முனைவர் இரவிதமிழ்வாணன்,
மணிமேகலைப்பிரசுரம்.

எழுத்துச்செல்வர் முனைவர் லேனாதமிழ்வாணன்.

முனைவர் சுபாசிணி, தமிழ்மரபுஅறக்கட்டளை.

முனைவர் கலை. செழியன், கவனகர், நினைவாற்றலர்.

முனைவர் வி. ஏ. சிவா ஐயாதுரை.

சொல்லின்செல்வி உமையாள் முத்து.

செல்வி குறள்சூடி உமையாள்.

"ஒருகுறள் ஒருவெள்ளி" போட்டிகள், "குறள்தேனீ" தவிர, திருக்குறள்நூலை அனைத்து வடஅமெரிக்கத் தமிழ் இல்லங்களுக்கும் கொண்டுசேர்ப்பது, தமிழ்ச்சங்கங்களில் திருவள்ளுவர் சிலையை அமைப்பது போன்ற பேரவையின் முயற்சிகளிலும் சாச்தா தமிழ்அறக்கட்டளை இணைந்து செயல்பட்டுவருகிறது.

சாச்தா தமிழ்அறக்கட்டளையின் மிகப் பெரிய பலம் அவர்களின் திறமை வாய்ந்த தன்னார்வலர்குழு, மற்றும்அவர்களைவழிநடத்திச்செல்லும்தலைமை.

தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல். (குறள் 462)

என்னும் குறளின் வழியில், பல்வேறு தெரிந்தெடுத்த தன்னார்வலர்களுடன் குழுவாக ஒருங்கிணைந்து செயலாற்றுவதால்

பல செயற்கரிய செயல்களை ஆற்ற இயலுகிறது. அடுத்த தலைமுறை மாணவர்கள் பலரும் இக்குழுவில் இணைந்திருப்பது மேலும் சிறப்பு. இத் தன்னார்வலர்களின் முயற்சியில் திருக்குறள் ஓதும் போட்டிகளுக்கான வழிமுறைகள், செயல்திட்டம் அதற்கான மென்பொருள்உருவாக்கம் என்று ஒவ்வொரு ஆண்டும் மென்மேலும் மெருகேறி வருகிறது.

தங்களின் போட்டிகளுக்கு மட்டுமல்லாமல், மற்ற பள்ளிகள், அமைப்புகள் திருக்குறள் போட்டிகள் நடத்துவதற்கும், மென்பொருளைப் பயன்படுத்தவும் உதவி வருகின்றனர். வேறு யாரேனும் இவ்வகையான முயற்சிகளை எடுத்தாலும் அவர்களுடன் இணைந்து அல்லது அவர்களை தங்களுடன் இணைத்துக்கொண்டு பணியாற்றத் தயாராக இருக்கிறார்கள் சாச்தா தமிழ் அறக்கட்டளை அமைப்பினர்.

குழந்தைகள் திருக்குறள் ஓதுதலை உலகளாவிய அளவில் எடுத்துச் செல்லவேண்டும், உலகெங்கும் திருக்குறள் பரவவேண்டும் என்பதைத் தங்களது அடுத்தக் குறிக்கோளாகக் கொண்டு, முனைப்புடன் செயலாற்றி வரும் சாச்தா தமிழ் அறக்கட்டளையை நாமும் வாழ்த்துவோமே!.

தொடர்புகொள்ள: https://www.stfnonprofit.org

# முனைவர் (திருமதி) சித்ரா மகேசு அவர்களோடு ஒரு நேர்காணல்

## முனைவர் இர. பிரபாகரன்

**கேள்வி**: முனைவர் (திருமதி) சித்ரா மகேசு அவர்களே! வணக்கம். தமிழ்நாட்டிலிருந்து, உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் என்ற அமைப்பு திங்கள்தோறும் "குறள்முழக்கம்" என்ற மின்மடலை வெளியிடுகிறது. அந்த மின்மடலில் திருக்குறளில் சாதனை புரிந்தவர்களைப் பற்றிய செய்திகளை வெளியிட விரும்புகிறோம். அமெரிக்காவில் 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்து சாதனை புரிந்தவர்களில் நீங்களும் ஒருவர் என்று கேள்விப்பட்டேன். உங்கள் சாதனைகளைப் பற்றி உங்களிடம் ஒரு சில கேள்விகளைக் கேட்கவிரும்புகிறேன்.



**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**: வணக்கம். உங்கள் திருக்குறள் மற்றும் குறள்முழக்கம் சார்ந்த பணிக்கு வாழ்த்துகள். திருக்குறள் இணையக் கல்விக்கழகம் அமைப்பின் குறள்முழக்கம் நடத்தும் மின்மடலில் பங்கேற்பதில் மகிழ்ச்சி. இந்த வாய்ப்பிற்கு என் நன்றி. உங்கள் கேள்விகளுக்குப் பொருத்தமான விடையளிக்க முயல்கிறேன்.

**கேள்வி**: நீங்கள் எப்பொழுது திருக்குறளைப் படிக்கத் தொடங்கினீர்கள்?

**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**: வணக்கம். பள்ளி மற்றும் கல்லூரிக்காலங்களில் படித்தது. அவ்வப்போது படிக்கும் பழக்கம் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருந்தது. எங்கள் குடும்பநண்பர் தினகர் அண்ணன், தமிழில் மிகுந்த ஆர்வத்தோடு இருப்பதைப் பார்த்து

1330 குறள்களையும் மனப்பாடம் செய்திடும் ஆர்வத்தை எனக்கு ஏற்படுத்தினார்.

**கேள்வி**: உங்களுக்குத் திருக்குறளில் ஆர்வத்தை உண்டாக்கியவர் யார்?

**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**: திருவள்ளுவர் என்றுதான் சொல்லவேண்டும். அப்படியாரும் இல்லை. ஏனென்றால் எனக்குப் பிடித்தால் மட்டுமே படிக்கும் மனது வரும், எனக்குத் தாய்மொழிமீது காதல். கவிதை பிடிக்கும். தமிழ்இலக்கியம் படித்தேன். திருக்குறளும் அப்படியே.

**கேள்வி**: 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்வதற்கு எவ்வளவு காலம் ஆகியது? அவற்றைஎப்படிப்படித்தீர்கள்?

**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**: 6 மாதங்கள் மட்டுமே எடுத்துக்கொண்டேன். திடீரென்று முடிவெடுத்துப் படித்ததுதான். முறையாக அதிகாரங்களாகத்தான் ஆரம்பித்துப் படித்தேன். பொருளை நினைவு வைத்து, அதன் தொடர்ச்சியாக என்னவரும் என்று முறைப்படுத்திப் படித்தேன்.

**கேள்வி**: நீங்கள் “குறளரசி” என்ற பட்டம் பெற்றதாகக் கேள்விப்பட்டேன். இந்தப் பட்டம் உங்களுக்கு யார் அளித்தது? எப்பொழுது அளிக்கப்பட்டது?

**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**: சாச்தா அறக்கட்டளை ஆண்டுதோறும் நடத்திவரும் திருக்குறள் போட்டியில் 2016 ஆம் ஆண்டு நடந்த போட்டியில் அளிக்கப்பட்டது. UT Austin – இல் இருந்து வந்திருந்த முனைவர். இராதாகிருட்டிணன் சங்கரன் மற்றும் திரு.வேலுஇராமன் மற்றும் திருமதி.விசாலாட்சிவேலு ஆகியோர் வழங்கினர்.

**கேள்வி**: எல்லாக் குறளுக்கும் உங்களுக்குப் பொருளும் தெரியும் அல்லவா?

**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**: பொருள் புரிந்துதான் படித்தேன். ஒவ்வொரு முறை படிக்கும்போதும் பொருள் உணர்வதில் புரிதல் புதுப்பிக்கப்படுகின்றது வள்ளுவத்தால். இன்னும் ஆழமாகக் கற்று உணரவேண்டியுள்ளது திருக்குறளின் பொருளை.

**கேள்வி**: திருக்குறள், தமிழ் தொடர்பாக நீங்கள் வேறு என்ன பணிகள் செய்துவருகிறீர்கள்?




**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**: தினமும் ஒரு குறள் என்று என்னுடைய புரிதலில் பொருளும், 6 சொற்களுக்குள் மிகாமல் குறுவிளக்கமும் (*ஹைக்கூவடிவம்* போன்று) அதனுடன் குறளோடு பொருந்திப் போகும்படியான ஆங்கிலக்குறிப்பினையும் பதிவிட்டுவருகின்றேன்.

**கேள்வி**: தமிழில் வேறு சாதனைகள் புரியும் திட்டம் உள்ளதா?

முனைவர் (திருமதி) சித்ராமகேசு: நிறையப் படிக்கவேண்டும், எழுத வேண்டும்.

**கேள்வி**: உங்களைப் போல் திருக்குறள் கற்கவேண்டும் என யாராவது முயற்சி செய்திருக்கிறார்களா? நீங்கள் மற்றவர்களை ஊக்குவித்திருக்கிறீர்களா?

**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**: ஆம், கேட்பவர்களுக்கு என்னால் எப்படி முடிந்தது என்று சொல்லியிருக்கின்றேன். முயன்றால் அனைவராலும் முடியும் என்று சொல்வேன்.

**கேள்வி**: உங்கள் வாழ்க்கையில் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் மூன்று குறட்பாக்களைக் கூறுங்கள். உங்கள் அரிய சாதனைகளுக்காக உங்களுக்கு எங்கள்வாழ்த்துகள்!

**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**:

1. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும்
   திண்மை உண்டாகப் பெறின்.(54)

ஒரு பெண் கற்பு என்னும் உறுதியைக் கொண்டவளாயின், அதை விடப் பெருமை வேறு எது? கற்பு என்பது உறுதி என்று அறிந்து கொண்ட ஆகப் பெரும்பெண்ணியம் சொல்லும் குறளாகப் பார்க்கிறேன்.

2. சென்ற இடத்தால் செலவிடாது தீதுஒரீஇ
நன்றின் பால் உய்ப்பதறிவு(422)

அறிவை ஆயுதமாக்கிச் செயல்பாட்டால் மனதைக் கட்டுப்படுத்தி நல்லவழியில் செயல்படலாம் எனச் சொல்லும் குறள்

3. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. (963)

வாழ்வில் உயர்ந்த நிலை வரும்போது பணிவும், பண்பும் வேண்டும். அந்த நிலை மாறும்போது யாரிடமும் தாழ்ந்துபோகாது தன்மானத்துடன் வாழவேண்டும்.

**முனைவர் (திருமதி) சித்ராமகேசு**: இந்த நல்வாய்ப்பை அளித்தமைக்கு மிகுந்த நன்றியும், அன்பும்.

**உலகத் திருக்குறள் இணையக்கல்விக்கழகம்** வெளியிடும் செய்திமடல்
(திங்கள்தோறும் பத்தாம்நாள் வெளிவருகின்றது.)

வள்ளுவர் குறளை வையகமெங்கும் பரப்புவது நம் கடமை. அதனைப் போன்றே வையகமெங்கும் நடக்கும் திருக்குறள் தொடர்பான நிகழ்ச்சிகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி ஓர் இதழ் மூலமாகத் தமிழ்மக்கள் அனைவரும் அறியும்வண்ணம் வழங்குவதும் இன்றியமையாததே.உலகையே சுருட்டி சட்டைப்பையில் இருக்கும் கைப்பேசி வழியாக அறிமுகப்படுத்தும் இணையமும் புலனமும் நமக்கு இப் பணியில் துணைநிற்கும்போது நாம் வாளா இருக்கலாமா?

ஆங்கிலத் திங்கள்தோறும் பத்தாம் நாள் உலகத் திருக்குறள் இணையக் கல்விக் கழகத்தினால் வெளிவரும் இந்த செய்திமடல் உங்களுக்கானது.நீங்கள் உலகின் எந்த மூலையிலிருந்தாலும் உங்கள் பகுதியில் நிகழும் குறள் தொடர்பான நிகழ்ச்சிகளை எங்களுக்கு எழுதியனுப்புங்கள்.வழமையான ஒருங்குறி (யூனிகோடு) அச்சுருக்களைப் பயன்படுத்தி சொல் கோப்புகளாக (MS Word) anjal@kuralvirtual.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.படங்கள் இருப்பின் அவற்றையும் தனியே படக்கோப்புகளாக அனுப்புங்கள்.

குறளைப் பரப்பும் பணியில் முனைந்துள்ள அமைப்புகளையும் சான்றோர்களையும் பற்றி எமக்குத் தெரிவியுங்கள்.அவ் விவரங்கள் வெளிவந்தால் குறள்பரப்பும் பணிக்கு அறிந்தேற்பு வழங்கிய நிறைவு நம் அனைவருக்குமே ஏற்படும் அன்றோ?

இணையவழி இலவசத் தனிச்சுற்றுக்கு விற்பனைக்கு அல்ல.